**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண். 300/2023**

2026–ம் வருடம் ஜனவரி திங்கள் 08–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் கூடுதல் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: பாக்கியம்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**கூடுதல் முதல் விசாரணை :–**

நான் இவ்வழக்கில் 2ஆம் வாதி ஆவேன். என்னுடைய கூடுதல் முதல் விசாரணை சாட்சியத்தை கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மாரிமுத்துப்பிள்ளையிடமிருந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் ஆகும். மாரிமுத்துபிள்ளை உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்துக்களை குறித்து எந்தவொரு ஆவணமும் ஏற்படுத்தவில்லை. மாரிமுத்துபிள்ளையும், அவரது மகன்கள் இருவரும் 25.07.1950 தேதியில் ஒரு பாகப்பிரிவினை பதிவு ஆவணம் எண்.2244/1950 மேலக்கரூர் சார்பதிவகம் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால்

அது பற்றி தெரியாது. மேற்சொன்ன பாகப்பிரிவினை குறித்து பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறியுள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மாரிமுத்துபிள்ளை உயிருடன் இருந்த காலத்திலேயே தாவா சொத்துக்களை பொறுத்து அவர்கள் மகன்கள் இருவரும் பதிவு செய்யப்பட்ட பாகசாசனத்தின் படி அனுபவித்து வரும் விவரத்தை நீங்கள் வேண்டுமென்றே தாவாவில் மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மாரிமுத்துப்பிள்ளை உயிருடன் இருந்தபோது மொத்தம் எவ்வளவு ஏக்கர் இருந்தது என்று தெரியாது தற்போது 19 ஏக்கர் சொத்து உள்ளது. 4 வருடங்கள் முன்பாக பிரதிவாதிகள் தாவா சொத்தின் ஒரு பகுதியை விற்றபோது தான் 19 ஏக்கர் சொத்து உள்ள விவரம் தெரியவந்தது. மாரிமுத்துபிள்ளை உயிருடன் இருந்த காலத்தில் சொத்துக்களை விற்றுள்ளார். மாரிமுத்துபிள்ளை இறந்தபிறகு அவரது மகன்கள் இருவரும் சொத்துக்களை விற்றுள்ளார்களா என்றால் விற்கவில்லை. 13.04.1994 தேதியில் மாரிமுத்துபிள்ளையின் இரு மகன்களும் இளங்கோ என்பவருக்கு சொத்துக்களை விற்றுள்ளார்களா என்றால் விற்கவில்லை. மாரிமுத்துபிள்ளை அவர் அனுபவித்து வந்த சொத்துக்களை ரெட்டியார்பிள்ளைக்கு விற்றுள்ளாரா என்றால் விற்கவில்லை. மாரிமுத்துபிள்ளை அவர் சொத்துக்களை ரெட்டியார்பிள்ளைக்கு விற்று பின்னர் அந்த சொத்துக்களை மாரிமுத்துபிள்ளையின் மனைவி பழனியம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மாரிமுத்துபிள்ளையின் மனைவி பழனியம்மாள் கிரையம் வாங்கிய சொத்துக்களை அவரது மகன்களுக்கு 21.08.1981–ல் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது. மாரிமுத்துபிள்ளை இறந்ததற்கு பின்னிட்டு அவர் அனுபவித்து வந்த

சொத்துக்களை அவரது இரண்டு மகன்கள் மட்டும் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல அவர்களுடன் என் தாயாரும் அனுபவித்து வந்தார். 1995 ஆம் ஆண்டில் மாரிமுத்துபிள்ளையின் மனைவி மற்றும் மகள், இரண்டு மகன்களுக்குள்ளும் ஒரு குடும்ப ஏற்பாடு செய்துகொண்டதில் மாரிமுத்து பிள்ளையின் அசையா சொத்துக்கள் அனைத்தும் மாரிமுத்துவின் மகன் அரியதம்பிக்கு ஒதுக்கப்பட்டும், உங்கள் தாயருக்கும், மாரிமுத்துபிள்ளையின் மனைவிக்கும் தலா ரூ.25,000/– பெற்றுக்கொண்டீர்கள் என்று சொன்னால் என் தாயாரும் அனுபவித்து வந்தார். அவ்வாறு சொத்துக்கள் அரியதம்பிக்கு ஒதுக்கப்பட்டு சொத்துக்கள் விற்கிரையங்கள் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. கந்தசாமி திருமணம் ஆகமால் இருந்து வந்ததால் அவர் அவரது இறுதிகாலம் வரை அரியதம்பியுடன் தான் இருந்து வந்தார் என்று சொன்னால் சரிதான் என் தாயாரும் அங்கு சென்று கந்தசாமியை பார்த்து வந்தார். உங்கள் தாயார் எக்காலத்திலும் கந்தசாமியை பார்த்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. கந்தசாமி அவரது கடைசி காலம் வரை அரியதம்பியுடன் தான் இருந்து வந்தார் என்றும் ஆகவே 2004–ல் அரியதம்பிக்கும், கந்தசாமிக்கும் ஒரு குடும்ப ஏற்பாடு கந்தசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அரியதம்பி அடைந்து கொள்ளவேண்டியது என்று அவர்களுக்குள் ஒப்புக்கொள்ளப்பட்டு அரியதம்பி சொத்துக்களை அடைந்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் கிணறு மட்டும் தான் உள்ளது போர் எதுவும் இல்லை. அரியதம்பியின் வாரிசுகள் தாவா சொத்துக்களில் காட்டு வேளாண்மை செய்து வருகிறார்கள். 1995 ஆண்டு குடும்ப ஏற்பாட்டிற்கு பிறகு உங்கள் தாயார் தாவா சொத்துக்களில் எப்பகுதியிலும் அனுபவித்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கந்தசாமியின் சொத்துக்களையும் உங்கள் தாயார்

அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல பொதுவாகத்தான் அனுபவித்து வந்தார்கள். நீங்கள் ஏற்கனவே விற்கப்பட்ட பல சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றும் அந்த சொத்துக்களை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்என்று சொன்னால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட பாகக்கறார் பத்திரம் மற்றும் குடும்ப ஏற்பாட்டின் படி சொத்துக்கள் அரியதம்பிக்கு ஒதுக்கப்பட்டதால் உங்களுக்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஊரில் உள்ள பொதுமக்களிடம் கூறி பிரதிவாதிகளிடம் தாவா சொத்தில் பாகம் கேட்டேன் அவர்கள் தர மறுத்துவிட்டார்கள். நீங்கள் பாகமே கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் எக்காலத்திலும் தாவா சொத்தில் அனுபவித்தில் இல்லாததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் உங்களுக்கு எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில உங்களுக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள், அரியதம்பி, கந்தசாமி ஆகியோர் ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணங்களை பொறுத்து நீங்கள் சொல்லியுள்ள ஆட்சேபனைகள் அனைத்தும் தவறு என்று சொன்னால் சரியல்ல.

<u>13 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

தாவா 11 வது அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர் 54 செண்ட் என்று சொன்னால் சரிதான். தாவா 11 வது அயிட்ட சொத்து உங்கள் பாட்டனார் ரெட்டியப்பபிள்ளை வகையரா மற்றும் பொன்னுசாமி பிள்ளை

ஆகியோருக்கு சரிபாதி பாத்தியம் என்றால் சரிதான். ரெட்டியப்பபிள்ளையின் பேரன் தான் எனது தாய்வழி தாத்தா மாரிமுத்துபிள்ளை என்று சொன்னால் சரிதான். பொன்னுசாமிபிள்ளைக்கு மெய்கண்டன், பழனிசாமி, கணபதி ஆகிய 3 மகன்கள் என்றால் சரிதான். பழனிச்சாமிக்கு கந்தசாமி, பெரியக்காள் என்ற மகன் மற்றும் மகளும் மாரியாயி என்ற மனைவியும் இருந்தார்கள். மாரியாயி நீங்கள் வழக்கு தாக்கல் செய்த போது உயிருடன் இருந்தாரக்ள் என்று சொன்னால் சரிதான். மாரியாயியை வழக்கில் சேர்க்காததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் குறிப்பான காரணம் எதுவும் இல்லை. 5 ஆம் பிரதிவாதி கந்தசாமியின் வாரிசுகளை அவரது இறப்பிற்கு பிறகு தாவாவில் கட்சி சேர்க்கவில்லை என்று சொன்னால் தெரியவில்லை. 1950 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் உங்கள் தாத்தாவுக்கு பொதுவில் 1/3 மாரிமுத்துபிள்ளைக்கும், 2/3 பாகம் கந்தசாமி மற்றும் அரியதம்பிக்கு சென்றுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 25.05.1955 –ல் மாரிமுத்துபிள்ளை தாவா 11 வது அயிட்ட சொத்தில் அவரது 3 ல் 1 பாகத்தை ரெட்டியப்பபிள்ளைக்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 14.02.1964–ல் தாவா 11 வது அயிட்ட சொத்தை ரெட்டியப்பபிள்ளையின் வாரிசுகள் மாரிமுத்துபிள்ளையின் மனைவி பழனியம்மாளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 11 வது அயிட்ட சொத்தை 21.08.1974 ல் பழனியம்மாள் தனது மகன்களான கந்தசாமி, அரியதம்பிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுத்து அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 11 வது அயிட்ட சர்வே எண்.248 பூமியை கிழமேலில் சரிபாதியாக பிரித்து வடபுற பாதி பாகத்தை உங்களுடைய வகையறாவான மாரிமுத்துபிள்ளையும், தென்புற பாதி பாகத்தை

பொன்னுசாமிபிள்ளை வகையறாவும் வாய்மொழி பாகக்கறார் மூலம் பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். மாரிமுத்து மற்றும் அவரது இரு மகன்களான கந்தசாமி மற்றும் அரியதம்பி ஆகியோர்களுக்குள் ஏற்பட்ட பாகக்கறார் மூலம் பழனியம்மாளிடம் தானமாக பெற்ற வகையிலும் தாவா 11வது அயிட்ட சர்வே எண்.248–ல் உங்கள் தகப்பனாருக்கோ தாயாருக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 11வது அயிட்ட சொத்து முழுவதுமாக கந்தசாமி மற்றும் அரியதம்பிக்கு பாத்தியப்பட்டவைகள் என்று சொன்னால் சரியல்ல. 13.04.1994–ல் கந்தசாமி, அரியசாமி ஆகியோர்களும், பொன்னுசாமிபிள்ளை வாரிசுகளான கணபதி, மெய்கண்டன், பழனிச்சாமிவகையறாக்கள் சேர்ந்து தாவா 11வது அயிட்டத்தில் உள்ள வடபுற சொத்துக்களை இளங்கோ என்பவருக்கு விற்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இளங்கோ கிரையம்பெற்ற காரணத்தினால் தான் வா.சா.ஆ.17 பட்டாவில் இளங்கோவின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. கூட்டு உரிமையளார்களான இளங்கோ மற்றும் 5ஆம் பிரதிவாதி கந்தசாமியின் வாரிசுகளை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்காததால் தாவா 11வது அயிட்ட சொத்தை பொறுத்து தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா 11வது அயிட்ட சொத்துக்களை உங்கள் வகையறாக்களான கந்தசாமி மற்றும் அரியதம்பி விற்றபடியால் அவைகள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பொன்னுசாமிபிள்ளை வாரிசுகளான கணபதி, மெய்கண்டன், பழனிச்சாமி ஆகியோர்கள் தாவா 11வது அயிட்ட சொத்தில் தென்புறப்பகுதியை மேற்சொன்ன மூவரும் அவர்களுக்குள் வாய்மொழியாக பாகம்பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். பழனிச்சாமி வகையறாக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைத்தான் 13ஆம்

பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். பழனிச்சாமியிடமிருந்து கிரையம் பெற்ற சொத்துக்களில் உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 11 வது அயிட்ட சொத்து தகுந்த விசாரணைக்கு பின்னிட்டு 13 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளதால் தாவா 11 வது அயிட்ட சொத்தை பொறுத்து உங்களுக்கு பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரிதான். 11 வது அயிட்ட தாவா சொத்தை பொறுத்து நீங்கள் எந்த காலத்திலும் கூட்டு சுவாதீனத்தில் இல்லாததால் தாவா 11 வது அயிட்ட சொத்தை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

**12 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.08 17:58:33 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.